## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.124/2016

2025 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 27 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.3 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திருமதி. R. பானுபிரியா, Bench Clerk (Gr–III)/IC அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 27.10.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. உத்திராபதி (DW–3 ) | வயது | : | 67 /2025 |
| த/க பெயர் | : | திரு. வேதநாயகம் | தொழில் | : | விவசயாம் |
| முகவரி | | ரெங்கநாதபுரம் | வட்டம் | : | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொண்டு உத்தரவிடுமாறு பிரார்த்திக்கிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்து வாதி வசந்தாவிற்கு சொந்தமானது என்றால் சரிதான். வாதி வசந்தா தற்போது உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். வாதி தாவா சொத்து சம்பந்தமாக யாரிடமும் எந்தவித ஒப்பந்தமும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் 2ம் பிரதிவாதி கண்ணன் தாவா சொத்து சம்பந்தமாக உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டது குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 567 குழி. ஏக்கருக்கு ரூபாய் 60,000 என்றால் 567 குழிக்கு எவ்வளவு என்றால் ரூபாய் 1,12,000 ஆகும். நான் ரூபாய் 1,12,000 என்று எவ்வாறு கணக்கிட்டு சொல்கிறேன் என்றால் ஒரு குழிக்கு ரூபாய் 200 என்று கணக்கிட்டு சொல்கிறேன்.

2) குழிக்கு ரூபாய் 200 என்று கணக்கிட்டால் 567 குழிக்கு ரூபாய் 1,13,500 வருகிறது, ஏன் ரூபாய் 1,12,000 என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் தரப்பினர்கள் ஏற்படுத்திக்கொண்டார்கள், அதுப்பற்றி எனக்கு தெரியாது. வாதி வயதானவர் என்பதால் அவரது சொத்தை பிரதிவாதிகள் அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.27 18:41:21 +0530

District Munsif
Mannargudi.